

சென்னை – அண்ணா அறிவாலயம் – 'முரசொலி மாறன் வளாக'க் கூட்ட அரங்கில் – நேற்று மாலை, கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணிக் கட்சி தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினர் சுப்புராயன், ஜி.கோவிந்தசாமி, வீரபாண்டி ஆகியோர் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.



நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. வடசென்னை மக்களவை தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் வடக்குப் பகுதி

## 92வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

### எம்.எம்.ஜெயரத்தினம் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் புகழ் அஞ்சலி!

சென்னை, பிப். 4-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் நேற்று கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று, அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில் 20/ஏ, பஸ் நிலையம் அருகே உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு, வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே ராஜன் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் கே. குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில் சுரேஷ் மாவட்ட கழக பிரதிநிதி எம் .சி.எழிலரசு மற்றும் ஏ.ஜி.வேலன் டாக்டர் எம் .சி.அழகிரி ஏ. சுந்தரி டி.கலைநேசன் எம்.பி.நவராஜ் எம்.என்.ராஜ்கமல் எம்.எஸ்.சந்தானம் எம்.பி. நவக்குமார் எம்.எஸ்.தமிழ் அழகன் எம்.பி.சீனிவாசன் எஸ்.ஜமுனா எஸ்.ராகுல் டி. ஜெயச்சந்திரன் எம் . ஜி.சுரேஷ் எஸ்.பாலாஜி எ.லீலவாதி டி.புகழேந்தி எம்.எஸ்.ஜெயசிம்மன்பி. நாகராஜ் கே.முருகன் கே.பிரகாஷ்எம் எம் கண்ணப்பன் ஜி.நாகராஜ். எம் சி.விமல்தாஸ் வி.ஆர். மகேந்திரன் எம் .ஜி.எம்.புகழேந்திசி.காமராஜ் டி. அமுல்ராஜ்

எல்.கிருஷ்ணமூர்த்தி கே.பிரகாஷ் எம்.சபரிதாஸ் என்.மல்லியப்பன் எம். ஜேம்ஸ் எஸ் ஆனந்தன் எம் .பி.நவசுந்தர் வளர்மதி டி. நிக்சன் டி.ஆல்பர்ட் எம். எஸ்.லட்சுமணன். .எம். டி.ராஜி. இளைஞர் அணி சேர்ந்த எம்.எஸ் . கார்த்திக் எம்.ஜி.விக்னேஷ் எம்.எம். ஜெ.ரோஷன்காந்த் சாய்விரசாமி கே.தயாநிதி எம்.பி. எழிலரசு வி.கலைவாணன் வி.திருமுருகன் எம்.இமயவர்மன் கே.மேகநாதன் எம்.வினோத் கோவிந்தசாமி வேலாயுதம் டி.என் முரளி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு நாளை முன்னிட்டு

## ஆயிரம்விளக்கு 113 வது வார்டில் பொதுமக்களுக்கு உணவு!

### மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஷ் பங்கேற்பு!

சென்னை, பிப். 4-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆணைக்கிணங்க, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், 9 வது மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், ஆயிரம்விளக்கு தொகுதி மேற்பார்வையாளர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 113 வது வார்டு, நுங்கம்பாக்கம் வடக்கு மாட வீதியில் உள்ள அகத்தீஸ்வரர் பிரசன்னா வெங்கடேச பெருமாள் திருமண மண்டபத்தில் 113 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஷ், அண்ணாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து சமபந்தி உணவு சாப்பிட்டார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், நுங்கை எஸ். சுரேஷ், கோயில் செயல் அலுவலர் நாராயணன், அறங்காவலர்கள் மற்றும் பி.மகேஸ், கோயில் உதவியாளர் எல்.கார்த்திக், எஸ். குணசேகரன், ஹாக்கி எம். எஸ்.சதிஸ்குமார், வா. கணேசன், நுங்கை எஸ்.சிரிதர், நுங்கை தே.ஹரி, எல். ஆர்.பாண்டியன், அ.ச.நம்பி, க.மோகன், செஞ்சி எஸ். புருஷோத்தமன், சோகி கார்த்திக், புஸ்பா நகர் பாபு, பி.முரளி, ஆர்.பார்த்திபன், வி.ஆனந்த்குமார், நட்பு நவின் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்த சமபந்தி விருந்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு பரிமாறப் பட்டது.

### ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையில்

## பிப்.5 ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு!

### ஜார்க்கண்ட் புதிய முதலமைச்சர் சம்பாய் சோரன் முடிவு!

ராஞ்சி, பிப்.4-

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி துணைத் தலைவர் சம்பாய் சோரன், ஜார்க்கண்ட் முதலமைச்சராக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து, சட்டப்பேரவையில் 10 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். அதன்படி நாளை (5ம் தேதி) அவர் சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த இருப்பதாக கூட்டணி கட்சியான காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இதை ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் மூத்த தலைவர் மனோஜ் பாண்டேவும் உறுதி செய்துள்ளார். தங்கள் கூட்டணிக்கு 48 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாகவும், இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பில் எளிதில் வெற்றி பெறுவோம் என்றும் மனோஜ் பாண்டே குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்கால முன்னெடுப்புகள் -

## இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் கருத்தரங்கம்!

### தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில்!

சென்னை, பிப். 4 -

டிசம்பர் 2023 இல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் மற்றும் எதிர் கால முன்னெடுப்புகள் குறித்து தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமையிலான ஒருநாள் கருத்தரங்கு கூட்டம் நடைபெற்றது.

தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10 வது தளத்தில் உள்ள கூட்ட ரங்கத்தில் நேற்று (3.2.2024) தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமையில் "டிசம்பர் 2023 இல் நிகழ்ந்த இரட்டைப் பேரிடர்களின் படிப்பினைகள் மற்றும் எதிர்கால முன்னெடுப்புகள்" குறித்த ஒரு நாள் கருத்து பரிமாற்ற பயிலரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பங்கேற்ற அலுவலர்கள் தனித்தனியே 7 குழுக்களாக பிரிந்து, விவாதித்து அறிக்கை வழங்கினார்கள்.

பேரிடர் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப் படுத்துதல் தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் தலைமையில் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் நடத்திய கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

உடனடி தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பாக கூடுதல் தலைமைச்செயலாளர், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அவர்களின் தலைமையில், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

உடனடி நிவாரணம் வழங்குதல் தொடர்பாக, கூடுதல் தலைமைச்செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின் தலைமையில், முதன்மைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

உள்கட்டமைப்புகளின் மீட்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தொடர்பாக, கூடுதல் தலைமைச்செயலாளர், நீர்வளத்துறை அவர்களின் தலைமையில் கூடுதல் தலைமைச் செயலாளர் நெடுஞ்சாலைத்துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

வெள்ளத் தடுப்புக்கான நகர்ப்புறத் திட்டமிடல் தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை அவர்களின் தலைமையில், துறை அதிகாரிகள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

சமூக ஈடுபாடுகள் பணி தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், கூடுதல் தலைமைச்செயலாளர், தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

மக்கள் தொடர்புத் துறை பணிகள் தொடர்பாக முதன்மைச் செயலாளர், பள்ளி கல்வித்துறை அவர்களின் தலைமையில், செயலர், செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அவர்கள் அடங்கிய குழு கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் பேரிடர்களை சந்திப்பதில் தக்க மேல்நடைவடிக்கைகள் எடுக்கப்படும் என தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

### சென்னை அண்ணா அறிவாலயத்தில்

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

### செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப்.4 -

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் வருகிற 06-02-2024 செவ்வாய் கிழமை காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவைச் சார்ந்த மாநில நிர்வாகிகள் உடன் மாவட்ட மற்றும் மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு. செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) தெரிவித்துள்ளார்.



காலையில் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள அறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஜெய பிரதீப்சந்திரன், டி.ஆர்.கோபி, பி.ஜோதிகுமார், ரமணி ஆதிமூலம், சி.சுரேஷ், கிரிஜா சந்திரன், சி.ஜெகன், ஸ்ரீதர்பாபு, வி.கார்த்திக், கி.வேலுமணி, இரா.செல்வகுமார், மலர் மு.கருணாநிதி, டி.கே.தாமஸ், தி.ச.நடராஜன், சிட்லபாக்கம் மனோகர், இரா.விஜயகுமார், இரா.ரத்தினகுமார், சிப்ஸ் மணி, எஸ்.மகேஷ், கி.மாறன், குணசேகர் ராஜா, கே.செல்வம், மைகல்ராஜ், ஆர்.செல்வகுமார், ஆர்.சினா, வழக்கறிஞர் பிரபு, ரமேஷ்பாபு, லோகநாதன், தங்கராஜ், டிவி.முருகன், வி.முனுசாமி, எம்.வினோத், சஞ்சீவி, சீனிவாசகுமார், பி.வி.ஏகாம்பரம், பி.காளியப்பன், முனுசாமி, எம்.சூரியா சரசுவதி, திவாகர், லோகேஷ், நவீன், டி.ஆர்.முரளி, சரவணன், பிரஸ் சேகர், நசீர், கலைவாணன், மெக்கனிக் பார்த்திபன், ராஜ்குமார், ஜெயம் ரவி, பிரபாகர், செல்வம், பூகடை எம்.நாகராஜன், ரமேஷ், ஆட்டோ ஸ்டாலின், குருமணி மற்றும் பலர் பங்கேற்றனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மணவாள நகரில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலை மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வளாகத்தில் திருவுருவப்படத்திற்கு மற்றும் திருவள்ளூர் நகராட்சி வளாகத்தில் உள்ள சிலைக்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், உதயமலர் பாண்டியன், ஜெயபாரதி, பா.சிட்டிபாபு, க.அரிகிருஷ்ணன், சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், ரமேஷ், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### குன்னூர் நகராட்சித் தலைவர் - கழகப் பொதுக்குழு உறுப்பினர்

## எல்.ஷீலா கேத்ரின் மறைவு!

### முதல்வர் - மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 4-

குன்னூர் நகராட்சி தலைவரும், தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினருமான திருமதி.எல்.ஷீலாகேத்ரின் (68) அவர்கள் 2.2.2024 வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணியளவில் மாரடைப்பால் குன்னூரில் இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் இரண்டு முறை தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும், இரண்டு முறை குன்னூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கழகத்தின் மீது மிகுந்த பாசம் கொண்டவராக கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். இவர், சிறுபான்மை மக்கள் மத்தியில் மிகுந்த அன்பு கொண்டவராக கழக பணியாற்றி வந்தார்.

இவரது கணவர் ஏற்கனவே காலமாகிவிட்டார். இவருக்கு திருமணமான ஜோஸ்வா ஜான்சன் என்கிற மகனும், ஈவா ஜென் என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



அறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 113 வது வார்டு, நுங்கம்பாக்கம் வடக்கு மாட வீதியில் உள்ள அகத்தீஸ்வரர் பிரசன்னா வெங்கடேச பெருமாள் திருமண மண்டபத்தில் 113 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஸ், அண்ணாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து சமபந்தி உணவு அருந்தினார். இதில் நுங்கை வி.எஸ்.ராஜ், நுங்கை எஸ்.சுரேஷ், நாராயணன், பி.மகேஸ், எல்.கார்த்திக், எஸ்.குணசேகரன், ஹாக்கி எம்.எஸ்.சதிஸ்குமார், வா.கணேசன், நுங்கை எஸ்.சிரிதர், நுங்கை தே.ஹரி, எல்.ஆர்.பாண்டியன், அ.ச.நம்பி, க.மோகன், செஞ்சி எஸ்.புருஷோத்தமன், சோகி கார்த்திக், புஸ்பா நகர் பாபு, பி.முரளி, ஆர்.பார்த்திபன், வி.ஆனந்த்குமார், நட்பு நவின் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அன்னாரின் இல்லத்திற்கு சென்று சி.வி.எம் .அ. சேகரன் முன்னாள் முரசொலி முகவர் பை.ப.தமிழ்வாணன் கே .இளந்திரையன் திருவள்ளுவன் த. வேழவேந்தன். திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். உடன் துணைவியார் ராணி முருகேசன் உள்ளார்.